மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.04/2021
அ.வ.எண்.341/2015

1. பெரியண்ணன் (இறந்துவிட்டார்)
2. சுப்ரமணி
3. ஆறுமுகம் (எ) சேகர்
4. பொன்னம்மாள் (இறந்துவிட்டார்)
5. தனலஷ்மி
6. ராணி
7. சுதந்திர வனிதா
8. சண்முக குமார்
9. சந்திரமேகலா
10. மணிகண்டன்
11. புனிதவதி
12. வேலுமணி
13. மணிமேகலை
14. மணிகண்டன்
15. கோவிந்தராஜ்
16. பரமேஸ்வரி
17. சந்திரா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பழனி
2. கோவிந்தன்
3. ராசி
4. சேட்டு
5. முருகேசன்
6. செந்தில்
7. பெரியசாமி
8. ராஜமாணிக்கம்
9. கந்தசாமி
10. ஆறுமுகம்
11. சுரேஷ்
12. முருகேசன்
13. கொழந்தைபையன்
14. லோகநாதன்
15. குமார்
16. சக்திவேல்

17. கந்தசாமி
18. பழனி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 29.10.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 மற்றும் 10 முதல் 17 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 9 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.தமிழ்நாதன் அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 9 ம்எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினரர்களாக்கப்பட்டும், 18 ம்எதிர்மனுதாரர் அசல்வழக்கிலேயே தோன்றாதரப்பினராகவும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் இவ்வழக்கையும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.194/2013 என்ற வழக்கையும் ஒன்றாக விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுவின் சுருக்கம் : –

பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு மற்றும் சுவாதீனத்திற்கு எந்த இடையூறும் செய்யக்கூடாது என பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி பிரதிவாதிகள் வாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.194/2013 ல் நிரந்தர தடையுத்தரவு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க கோரி வாய்தா போடப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி இரு வழக்குகளும் நீதிமன்றத்தில் திருத்தப்பாடு செய்ய வேண்டி நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கிலுள்ள சொத்துவிபரங்களும், தரப்பினர்களும், அ.வ.எண்.194/2013 வழக்கின் தரப்பினர்கள் மற்றும் சொத்துவிவரங்களும் ஒன்றாகும்.

இரண்டு வழக்குகளையும் ஒன்று சேர்த்து விசாரணை செய்தால் மட்டுமே இருதரப்பு வாதத்தை நீதிமன்றத்தில் ஊர்ஜிதம் செய்ய இயலும். எனவே இவ்வழக்கையும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.194/2013 என்ற வழக்கையும் நீதிமன்றத்தில் ஒன்றாக விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 5 ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 4, 6 மற்றும் 10 முதல் 17 ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

இவ்வழக்கில் கண்ட தரப்பினர்களும், அ.வ.எண்.194/2013 வழக்கில் கண்ட நபர்களும், இரு வழக்கு சொத்துகளும் ஒன்றே என்பது குறிப்பாக மறுக்கப்படுகிறது. இரு வழக்குகளில் கண்ட தரப்பினர்களில் வேறு வேறு நபர்கள் உள்ளனர். இரு வழக்கு சொத்துகளும் வெவ்வேறானவை. இரு வழக்கு கோப்புகளையும் மேலேழுந்தவராக பார்க்கும்போது இந்த உண்மை புலனாகும். இரு வழக்குகளிலும், தரப்பினர்களும் ஒன்றல்ல. சொத்து விவரங்களும் ஒன்றல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 6 மற்றும் 10 முதல் 17 ம்எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு மற்றும் சுவாதீனத்திற்கு எந்த இடையூறும் செய்யக்கூடாது என பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் எனவும், மேற்படி பிரதிவாதிகள் வாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.194/2013 ல் நிரந்தர தடையுத்தரவு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க கோரி வாய்தா போடப்பட்டு நிலுவையில்

உள்ளது எனவும், மேற்படி இரு வழக்குகளும் நீதிமன்றத்தில் திருத்தப்பாடு செய்ய வேண்டி நிலுவையில் உள்ளது எனவும், மேற்படி வழக்கிலுள்ள தரப்பினர்களும், சொத்துவிபரங்களும் அ.வ.எண்.194/2013 தரப்பினர்களும், சொத்துவிவரங்களும் ஒன்றே எனவும், இரண்டு வழக்குகளையும் ஒன்று சேர்த்து விசாரணை செய்தால் மட்டுமே இருதரப்பு வாதத்தை நீதிமன்றத்தில் ஊர்ஜிதம் செய்ய இயலும் எனவும், எனவே இவ்வழக்கையும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.194/2013 என்ற வழக்கையும் நீதிமன்றத்தில் ஒன்றாக விசாரணைக்கு ஏற்றுக் கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 6 மற்றும் 10 முதல் 17 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கில் கண்ட தரப்பினர்களும், அ.வ.எண்.194/2013 வழக்கில் கண்ட நபர்களும், இரு வழக்கு சொத்துகளும் ஒன்றே என்பது குறிப்பாக மறுக்கப்படுகிறது எனவும், இரு வழக்குகளில் கண்ட தரப்பினர்களில் வேறு வேறு நபர்கள் உள்ளனர் எனவும், இரு வழக்கு சொத்துகளும் வெவ்வேறானவை எனவும், இரு வழக்கு கோப்புகளையும் மேலேழுந்தவராக பார்க்கும்போது இந்த உண்மை புலனாகும் எனவும், இரு வழக்குகளிலும், தரப்பினர்களும் ஒன்றல்ல எனவும், சொத்து விவரங்களும் ஒன்றல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 6 மற்றும் 10 முதல் 17 ம்எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுதாரர்கள் தரப்பில் அ.வ.எண்.194/2013 வழக்குரையை இம்மனுவுடன் தாக்கல் செய்யாதபோதும், அவ்வழக்கும் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அந்த வழக்குரையும் இம்மனுவிற்காக பரிசீலனை செய்யப்பட்டது.

(iv) இவ்வழக்கின் மனுதாரர்கள்/வாதிகள் தான் அ.வ.எண்.194/2013 ல் பிரதிவாதிகள் ஆவார். அந்த வழக்கிலுள்ள வாதிகளான பழனி, ஆறுமுகம், கொழந்தையப்பன், கந்தசாமி ஆகியோர் இவ்வழக்கில் பிரதிவாதிகளாகவும், அவ்வழக்கில் இல்லாத இதர நபர்களும் பிரதிவாதிகளாக உள்ளதும் தெரியவருகிறது.

(v) இவ்வழக்கில் ஓலைப்பட்டி கிராமம், ச.எண்.248/1பி, ச.எண்கள்.248/1ஏ3, 248/2–ல் உள்ள சொத்துகளை சொத்துவிபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. அ.வ.எண்.194/2013ல் ச.எண்.248/1ஏ1–ல் உள்ள 74 செண்ட், ச.எண்.248/1ஏ2–ல் உள்ள 70 செண்ட், ச.எண்.248/2ல் உள்ள தார்சாலை ஆகியவற்றை குறித்து அ.வ.எண்.194/13 தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இரண்டு வழக்குகளிலும் ச.எண்.248/2யை தவிர மற்ற சொத்துகள் வெவ்வேறானதாகும். எனவே இரண்டு வழக்கின் சொத்துகளும் ஒன்று தான் என மனுதாரர்கள் கூறுவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் அ.வ.எண்.194/2013ல் உள்ள வாதிகளை விட அதிகமான தரப்பினர்கள் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக உள்ளதால் இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரித்தால் குழப்பம் தான் ஏற்படும் என்பதால் இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரிக்க வேண்டுமென கூறுவது ஏற்புடையதல்ல என தீர்மானித்து இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு தள்ளுபடி செய்யப்பட்டும், அவரவர் செலவுத்தொகைககளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.